<u>MELUR MUNICIPALITY</u>

<u>Minutes of the Council Meeting held on 07.05.2018 (Ordinary)</u>

<table>
<tr><th>Resolution No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>250</td><td>
பொருள் எண்.1
திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேலூர் நகராட்சியில் தனியார் மயம் மூலம் 40 பணியாளர்களை கொண்டு 9 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்த முறையில் நியமித்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6094/பி3/2018 நாள்.14.03.2018 ல் அனுமதி பெறப்பட்டு 18.04.2018 அன்று E-Tender மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 18.04.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட 9 நிறுவனங்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனம்</th><th>ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட முறை</th></tr>
<tr><td>1.</td><td>M/s. Excel Neat and Tidy Agency<br>14, Gandhi nagar 1st street 13th cross<br>Dindigul-001</td><td>Offline</td></tr>
<tr><td>2.</td><td>Thiru. GuruRamasamy<br>AITUC, Millgate, Melur</td><td>Offline</td></tr>
<tr><td>3.</td><td>M/s. Jai Shirdi Sai man power Agency, Madurai</td><td>Offline</td></tr>
<tr><td>4.</td><td>M/s. V.P Kanagaraj<br>8, Bethaniapuram, Madurai-16</td><td>Offline</td></tr>
<tr><td>5.</td><td>M/s. Corelive Foundation<br>Madurai-18</td><td>Online</td></tr>
<tr><td>6.</td><td>M/s. Quality service Society, Madurai-2</td><td>Online</td></tr>
</table>
</td><td>ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 7. | M/s. Integrated service center<br>Madurai-4 | Online |
| 8. | M/s. Relyon Facility service<br>Adayar, Chennai-20 | Offline |
| 9. | SS Cleaning service<br>Sivagangai | Offline |

மேற்கண்ட ஒன்பது நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 23.04.2018 அன்று கூர்ந்தாய்வு குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்.3 மற்றும் 8ல் உள்ள நிறுவனங்களை தவிர மற்ற நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதி (Technical Bid) பெறப்படாமையினால் ஒப்பந்தப்புள்ளி நிரகாரிக்கப்பட்டது. வரிசை எண்.3 மற்றும் 8ல் உள்ள நிறுவனங்களின் (Price Bid) விலைவிகித உறை 27.04.2018 அன்று மாலை 4.00 மணிக்கு திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி விலை | மதிப்பீட்டினை விட |
|---|---|---|---|---|
| 1 | M/s. Relyon Facility service<br>Adayar, Chennai-20 | ரூ.6300000 | 6117400 | 2.90 % குறைவு |
| 2 | M/s. Jai Shirdi Sai man power Agency, Madurai | ரூ.6300000 | 6115940 | 2.92 %குறைவு |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள இரண்டு நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Jai Shirdi Sai man power Agency, Madurai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

<table>
<tr><td>251</td><td>

## பொருள் எண்.2

அலுவலக பயன்பாட்டிற்கு கீழ்க்கண்ட விபரப்படி உள்ள பைண்டிங், ஜெராக்ஸ், சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் பைண்டிங் செய்தது, மற்றும் **1981** முதல் **2001** வரை உள்ள உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கை பைண்டிங் செய்வதற்கு விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>விபரம்</th><th>J.P.புக் பைண்டிங்</th><th>ஸ்ரீராம் பவர் பிரஸ்</th></tr>
<tr><td>1.</td><td>TN59AZ 1363 லாக்புக் ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங்</td><td>350</td><td>450</td></tr>
<tr><td>2.</td><td>MTC 70 Non salary பைண்டிங்</td><td>150</td><td>200</td></tr>
<tr><td>3.</td><td>வாக்காளர் பட்டியல் பைண்டிங்</td><td>450</td><td>600</td></tr>
<tr><td>4.</td><td>2016–17 சொத்துவரி நிலுவை மற்றும் நடப்பு கேட்பு பதிவேடு 10 எண்ணம்</td><td>750</td><td>1950</td></tr>
<tr><td>5.</td><td>தொழில்வரி 2016–17 ஆண்டு நிலுவை நடப்பு கேட்பு பதிவேடு 5 எண்ணம்</td><td>375</td><td>1000</td></tr>
<tr><td>6.</td><td>குடிநீர் கட்டணம் 2016–17 ஆண்டு நிலுவை மற்றும் நடப்பு பதிவேடு 5 எண்ணம்</td><td>375</td><td>500</td></tr>
<tr><td>7.</td><td>1981 முதல் 2001 வரை உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கை பைண்டிங்</td><td>1300</td><td>1500</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>3750</td><td>6200</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் J.P.புக் பைண்டிங் & பிரிண்டிங் ஒர்க்ஸ்–இன் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

</td><td>அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
</table>

<u>MELUR MUNICIPALITY</u>
<u>Minutes of the Council Meeting held on 14.05.2018 (Ordinary)</u>

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 252 | **பொருள் எண்.1**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 பாலமுருகன்கோவில் பின்புறம் உள்ள தெருவில் மழைநீர்வடிகால் மற்றும் இரண்டு சிறிய பாலங்கள் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>வேலையின் பெயர்: வார்டு எண்.8, பாலமுருகன்கோவில் பின்புறம் மழைநீர் வடிகால் மற்றும் இரண்டு சிறுபாலங்கள் அமைக்கும் பணி — மதிப்பீடு: ரூ.6.00இலட்சம்<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.876/2018/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| 253 | **பொருள் எண்.2**<br><br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் உள்ள கடைகளில் 17 கடைகள் மேற்கூரை சேதமடைந்தும், தரைத்தளம் மிகவும் பழுதடைந்துள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் பொதுமக்களின் நலன் மற்றும் வியாபாரிகளின் பாதுகாப்பு கருதி சீர்செய்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட மராமத்து பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

Nested table within resolution 252:

| வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|
| வார்டு எண்.8, பாலமுருகன்கோவில் பின்புறம் மழைநீர் வடிகால் மற்றும் இரண்டு சிறுபாலங்கள் அமைக்கும் பணி | ரூ.6.00இலட்சம் |

<table>
<tr><td></td><td>

| வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|
| தினசரி சந்தையில் உள்ள 17 கடைகளில் மேற்கூரை மற்றும் தரைதளம் உள்ளிட்டவைகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.3.00இலட்சம் |

அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.830/2018/இ1
</td><td></td></tr>
<tr><td>254</td><td>

**பொருள் எண்.3**

மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண்.2380/2017/பி1 நாள்.12.03.2018 கடிதத்தில் ESCO II திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குInvestment Grade Auditing street lighting system and preparing the DPR தயார் செய்த வகைக்கு இந்நகராட்சியின் பங்குதொகையாக ரூ.2,83,295/–ம் ஒப்பந்தப்புள்ளி விளம்பர கட்டணமாக ரூ.10256/– மொத்தம் ரூ.2,93,551/– ஐ “The Regional Director of Municipal Administratino Madurai” என்ற முகவரிக்கு காசோலை அல்லது வரைவோலையாக அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி தொகை ரூ.2,93,551/– வழங்க மன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு<br>
அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ஆ) மேற்கண்ட தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(கோப்பு எண்.2666/2017/இ1)
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 255 | **பொருள் எண்.4**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் குப்பைகள் அள்ளுதல், சாக்கடை சுத்தம் செய்தல், மண்மேடுகள் அப்புறப்படுத்துதல் மற்றும் முட்புதர்களை அகற்றுதல் போன்ற பொதுசுகாதார பணிகளை செய்வதற்கு தளவாட பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,30,000/— க்கு நகர்மன்ற தீர்மான எண்.179 நாள்.18.01.218ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு, மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்தில் கீழ்க்கண்டவாறு தளவாட சாமான்கள் பெறப்பட்டது.<br><br>1. குந்தாணி —60 எண்ணம்<br>2. சாக்கடை கரண்டி —50 எண்ணம்<br>3. குப்பை அள்ளும் ஊசி —50 எண்ணம்<br>4. மண்வெட்டி (கைப்பிடி இரும்பு) — 15 எண்ணம்<br>5. கடப்பாறை —4 எண்ணம்<br>6. கூட்டுமார் —50 எண்ணம்<br>7. மண்தள்ளும் பிரஸ் —25 எண்ணம்<br>8. அரிவாள் —8எண்ணம்<br>9. வால்அரிவாள் —4 எண்ணம்<br>10. தென்னைமார் —60 எண்ணம்<br>11. கூட்டுமாப்பு —5 எண்ணம்<br><br>மேற்கண்ட பொருட்கள் விநியோகம் செய்ததற்கான பில்தொகை பட்டியல் ரூ.141522.00 க்கு வரப்பெற்றுள்ளது. எனவே மீதித்தொகை ரூ.11,522/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 256 | **பொருள் எண்.5**<br><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான உரக்கிடங்குப் புதியதாக LTCT மின்இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தவேண்டிய வைப்புத்தொகை ரூ.40,800/— கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையை மின் வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அவசர அவசியம் கருதி தொகை செலுத்த அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 257 | **பொருள் எண்.6**<br><br>பொருள்: மேலூர் நகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்குகாய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை மருத்துவ மலர் 2017ல் வெளியிடப்பட்டதற்கான விளம்பரக்கட்ணம் ரூ.5000/— மாலை முரசு நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.3198/2016/எச்1 | அனுமதிக்கப்பட்டது |
| 258 | **பொருள் எண்.7**<br><br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,மதுரை அவர்களின் 04.03.2018ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் மேலூர் நகராட்சி பகுதிகளில் புதிதாக நுண்ணுயிர் உரக்கிடங்கு அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் மேலூர் நகராட்சி பகுதிகளில் நகராட்சி அலுவலகம் பின்புறம் மற்றும் மேலூர் நகராட்சி வாரச்சந்தை அருகில் ஆகிய இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | மேலூர் நகராட்சி அலுவலகம் பின்புறம் புதியதாக நுண்ணுயிர் உரக்கிடங்கு அமைக்கும் பணி | 26.00 |
| 2. | மேலூர் நகராட்சி வாரச்சந்தை அருகில் புதியதாக நுண்ணுயிர் உரக்கிடங்கு அமைக்கும் பணி | 30.00 |
| | மொத்தம் | 56.00 |

மேற்கண்டவாறான ரூ56.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மதிப்பீட்டு தொகை ரூ.56.00 இலட்சத்தை அரசு மான்யம் பெற்று மேற்கண்ட பணிமேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1975/இ2/2018

259

## பொருள் எண்.8

அனுமதிக்கப்பட்டது

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 21.03.2018ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் சொத்துவரி கேட்பிற்கு ஏற்றாற்போல் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதின்படி மேலூர் நகராட்சியில் 15101 சொத்துவரி கேட்பின் எண்ணிக்கையின்படி தற்போது வரை 2396 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் 26.03.2018ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில்

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சிக்கு கூடுதலாக 8000 எண்ணிக்கை குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டுமென குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதற்கு இணங்க மேற்காணும் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கிட ஏதுவாக Internal Plumping of Water Supply House Service Connection வசதிகள், தெருவின் பகிர்மானக் குழாயிலிருந்து வீடு வரை குழாய் பதித்து பணிகள் செய்திட மதிப்பீடு ரூ.465 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மதிப்பீட்டு தொகை ரூ.465 இலட்சத்தை TUFIDCO நிதி நிறுவனம் மூலம் வட்டியில்லாத கடனாக பெற்று மேற்கண்ட பணிமேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.944/இ2/2018 | |
| 260 | **பொருள் எண்.9**<br><br>தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு சாலைகள் சீரமைப்பு திட்டம் (TURIP) 2018–19ன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு உரிய கருத்துரு தயார் செய்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட இடங்களில் மேற்படி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளவும், நகராட்சி நிதி நிலைமையினை கருத்திற்கொண்டு மேற்படி பணிகளுக்கு ஆகும் செலவின தொகை அனைத்தையும் முழுமான்யமாக வழங்க ரூ.300.00லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | 16,11,<br>21,23 | வார்டு 21, மலம்பட்டி, உரங்கிடங்கு, உசிலம்பட்டி ரோடு, வார்டு 11 பாரதியார்புரம், வார்டு 23 ,தினசரி சந்தை ரோடு வார்டு 16 மதுரை ரோடு வடக்குப்பகுதி, காந்திநகர் ஆகிய பகுதிகளில் | 5.980 | 4.50 | 200.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பேவர் மிஷின் மூலம் தார்சாலை அமைக்கும் பணிகள் | | | |
| | 2 | 4,16,20 | வார்டு 4 அண்ணா காலனி, வார்டு 16, எஸ்.எம்.நகர், வார்டு 20 பிஸ்மில்லா நகர் ஆகிய பகுதிகளில் பேவர் மிஷின் மூலம் தார்சாலை அமைக்கும் பணிகள் | 2.130 | 4.50 | 100.00 |
| | | | மொத்தம் | 8.110 | | 300.00 |

அலுவலகக்குறிப்பு:-

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்க வேண்டியும், மதிப்பீட்டுத் தொகை அனைத்தையும் முழுமான்யமாக வழங்க கோரியும், விரிவான திட்ட அறிக்கை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.973/இ1/2018

| 261 | **பொருள் எண்.10** | அனுமதிக்கப்பட்டது |
|---|---|---|

இந்நகராட்சியின் 2018–19ம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்டுள்ள வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2017–18ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

| 262 | **பொருள் எண்.11** | பதிவு செய்யப்பட்டது. |
|---|---|---|

இந்நகராட்சிக்கு கட்டிட வரைபட அனுமதி கோரும் விண்ணப்பங்களுக்கு கட்டிட வரைபடம் தயார் செய்து வழங்க கட்டிட வரைவாளராக பதிவு செய்ய கோரி கீழ்க்கண்ட விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண். | விண்ணப்பதாரர் பெயர் | முகவரி |
|---|---|---|
| 1. | I.இளையரசு B.E.,(Civil Engineering) | எம்.மலம்பட்டி, மேலூர்–625106 |
| 2. | P.பிரசாந்த் B.E.,(Civil Engineering) | 1/18,வடக்குத்தெரு, சூரக்குண்டு, மேலூர் |
| 3. | R.குணாநிதி B.E.,(Civil Engineering) | சுண்ணாம்பூர், மேலூர் |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>4.</td><td>S. வினோத்குமார் B.E.,<br>(Civil Engineering)</td><td>62C/9, EB மங்கலம் நகர்<br>மேலூர் டவுன்–625106<br>மதுரை மாவட்டம்</td></tr>
<tr><td>5.</td><td>A. பெரோஸ்கான் D.C.E.,<br>(Civil Engineering)</td><td>113, சிவகங்கை ரோடு, மேலூர்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br><br>
மேற்கண்ட விண்ணப்பதாரர்கள் கட்டடவியல் பொறியியல் பட்டம் பெற்றுள்ளார்கள். எனவே மேற்கண்ட விண்ணப்பதாரர்களை இந்நகராட்சியில் கட்டிட வரைவாளர்களாக பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>263</td>
<td>
பொருள் எண்.12<br>
இந்நகராட்சியில் உள்ள ஜெனரேட்டரை பழுது நீக்கம் செய்ய ரூ.3883/– க்கான செலவினத்தை மேற்கொண்ட இந்நகராட்சி மேலாளர் திரு.எம்.இரத்தினகுமார் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
அவசரம் அவசியம் கருதி அலுவலகம் மூலம் பணி மேற்கண்ட செலவினத்தை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

# MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 21.05.2018 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 264 | **பொருள் எண்.1**<br><br>கடந்த 17.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் மேலூர் நகராட்சியில் உயிர் சுரங்க முறையில் உரக்கிடங்கு அமைக்க தெரிவிக்கப்பட்டது.<br>அதனடிப்படையில் மலம்பட்டியில் அமைந்துள்ள இந்நகராட்சிக்குச் சொந்தமான உரக்கிடங்கில் உயிர் சுரங்க முறையில் உரக்கிடங்கு அமைக்க ரூ.265.00இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கும், மதிப்பீட்டின் மீது நிர்வாக அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 265 | **பொருள் எண்.2**<br><br>இந்நகராட்சிக் குப்பைக்கிடங்கில் குப்பைகள் கொட்டுவதற்கு இடம் இல்லாத காரணத்தால் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குப்பைகளை ஜே.சி.பி.இயந்திரம் மூலம் சமப்படுத்தும் பணிக்கு கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. | ஏற்கப்பட்டது. |

| வ.எண். | நிறுவனம் | 1 மணி நேரத்திற்கு (டிரைவர் பேட்டா உட்பட) |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஹரி எர்த்மூவர்,மேலூர் | 1400 |
| 2. | அப்துல்லா எர்த் மூவர்ஸ்,கல்லம்பட்டி | 1300 |
| 3. | வேல்முருகன் எர்த் மூவர்ஸ், மேலூர் | 1475 |

| | | |
|---|---|---|
| | பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள அப்துல்லா எர்த் மூவர்ஸ்,கல்லம்பட்டி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>(கோப்பு எண்.704/2018/எச்1) | |
| 266 | **பொருள் எண்.3**<br><br>இந்நகராட்சியின் கணினி பயன்பாட்டிற்கு தேவையான Toner, Keyboard, Mouse மற்றும் இதர பொருட்களை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/– க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட பொருட்களை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/– ஐ பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) அலுவலக பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று பொருட்களை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.352/2018/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 267 | **பொருள் எண்.4**<br><br>இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான Toner, Keyboard, Mouse மற்றும் இதர பொருட்கள் பெற கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.<br><br>1. **Thirupathi Office Products<br>211, Naicker New street<br>Madurai -625 001** | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **2. Delta Agencies**<br>**39, Chokkalanga nagar**<br>**Madurai-16**<br><br>**3. ELITE Enterprises**<br>**Jb complex**<br>**Madurai.**<br><br>அலுவலகக் குறிப்பு<br>மேற்கண்ட விலைப்புள்ளியில் மிகக்குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Madurai Thirupathi Office Products நிறுவனத்திற்கு பொருட்களை விநியோகம் செய்ய, அலுவலக பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.352/2018/இ1) | |
| 268 | **பொருள் எண்.5**<br><br>திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் 2015–16 மற்றும் 2016–17 ம் ஆண்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கழிப்பறைகளை நிபந்தனைகளின் பேரில் பராமரிப்பு செய்ய கீழ்க்காணும் விபரப்படி சுயஉதவிக் குழுக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.<br><br>1. சிவன்கோவில் தெரு – கோபுரம் மகளிர் சுய உதவிக்குழு<br>2. பேருந்துநிலையம் – முத்துமாரியம்மன் மகளிர் சுயஉதவிக்குழு<br>3. சொக்கம்பட்டி – அன்னைதெரசா மகளிர் சுய உதவிக்குழு<br>4. நகராட்சி எதிர் பெட்ரோல் நிலையம் அருகில் – தொட்டிச்சி மகளிர் சுயஉதவிக்குழு<br><br>நிபந்தனைகள்<br>1. மேற்குறிப்பிட்ட பதிவு பெற்ற சுய உதவிக்குழு அதன் தீர்மானத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட தலைவர், செயலாளரால் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடப்பட வேண்டும். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2. திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சமுதாயக் கழிப்பறையை பொதுமக்கள் நல்லமுறையில் உபயோகப்படுத்த சுயஉதவிக்குழு சிறந்த முறையில் பாதுகாத்து பராமரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.<br>3. சமுதாயக் கழிப்பறை வசதிகளைப் பொதுமக்களுக்கு இரவும், பகலும் உபயோகப்படுத்த வழிவகை செய்து கொடுக்க வேண்டும்.<br>4. இந்த சமுதாயக் கழிப்பறையினை பயன்படுத்துவோரிடமிருந்து உபயோக கட்டணம் வசூலித்து நல்லமுறையில் பராமரிக்க மேற்படி சுயஉதவிக்குழு பொறுப்பேற்க வேண்டும்.<br>5. மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு தேவையான உபயோக பொருட்களான வாளி, குவளை மற்றும சுத்தப்படுத்த தேவையான துடைப்பம், பினாயில், கிருமிநாசினி போன்ற இதர பொருட்கள் வாங்கி பயன்படுத்தவும், பழுதடைந்த மின்சார விளக்கு மற்றும் தேவையான பொருட்களை மாற்றியமைக்கவும் சுயஉதவிக்குழு பொறுப்பேற்க வேண்டும்.<br>6. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வசதிகளை நல்லமுறையில் செயல்படுத்த மின்மோட்டார் பழுது பார்க்கவும் மற்றும் பராமரிப்பு செலவினங்களை ஏற்கவும் சுயஉதவிக்குழு ஒப்புதல் அளிக்க வேண்டும்.<br>7. ஐந்த ஆண்டுகளுக்கு ஒருமுறை வெள்ளை, கலர் பெயிண்ட் அடித்தல் போன்ற பராமரிப்பு செலவுகளை நகராட்சி ஏற்கும்.<br>8. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மின்சார வாரியத்திற்கு கட்டப்படும் மின் கட்டண செலவினங்களை சுயஉதவிக்குழு ஏற்க வேண்டும்.<br>9. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட வசதிகளை சுத்தமாக பராமரிக்க இரு பணியாளர்களை அமர்த்தி, அவர்களுக்கு செலுத்த வேண்டிய பராமரிப்புத் தொகையை பயனாளிகளிடமிருந்து வசூலித்து அந்த தொகையிலிருந்து சுயஉதவிக் குழுக்கள் வழங்க வேண்டும்.<br>10. மேற்படி சுயஉதவிக்குழு வசூலிக்கும் கட்டணம் மற்றும் செலவு கணக்குகளை முறையாக பராமரித்தல் வேண்டும்.<br>11. கழிப்பறையின் நச்சுத்தொட்டி நிறைந்துவிட்டால் சுயஉதவிக்குழு தன் பொறுப்பில் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். | |

| | | |
|---|---|---|
| | 12. அங்கீகரிக்கப்பட்ட நபர் கீழ்க்கண்ட பதிவேடுகளை கையாள வேண்டும்.<br>வரவு செலவு கணக்குப் பதிவேடு<br>பணம் வசூலிப்பதற்கான ரசீது புத்தகம்<br>கூட்ட நிகழ்வுப் பதிவேடு<br>உறுப்பினர்கள் பணம் செலுத்தியதற்கான பதிவேடு<br>13. சமுதாய சார்வு அமைப்பு மாதம் ஒருமுறை கூட்டத்தை நடத்தி கூட்டத்தில் நடக்கின்ற நிகழ்வுகள் மற்றும் முடிவுகளைப் பதிவு செய்து வைத்தல் வேண்டும்.<br>14. இந்த திட்டத்தில் வரவு செலவு குறிப்புகளை சமுதாய சார்பு அமைப்பு கூட்டத்தில் தெரிவித்தல் வேண்டும்.<br>15. இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை வேறு பயன்பாட்டிற்கு பத்து வருடங்களுக்கு நகராட்சி மாற்றியமைக்காது.<br>16. இத்திட்ட பகுதியில் குப்பைகளை அகற்றுதல் மற்றும் கழிவு நீர்க் கால்வாய்களை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை நகராட்சி செய்யும்.<br>17. சுயஉதவிக்குழு மேற்குறிப்பிட்ட ஏதேனும் கடமைகளை செய்ய தவறினால் நகராட்சி சுகாதார ஆய்வாளர் தெரியப்படுத்திய குறைபாடுகளை 30 நாட்களுக்குள் சரிசெய்து நகராட்சிக்கு அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிக்கத் தவறினால் வழங்கப்பட்ட உரிமைகளை நகராட்சி திரும்பப் பெற்றுக் கொள்ளும்.<br><br>மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு சமுதாயக் கழிப்பறைகளை நல்லமுறையில் பராமரிக்கும் பொருட்டு சுயஉதவிக்குழுக்கள் ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |

| | | |
|---|---|---|
| 269 | **பொருள் எண்.6**<br><br>இந்நகராட்சி பகுதிகளில் கொசுக்களால் பரவும் நோய்கள் பரவுவதை தடுக்கும் நடவடிக்கையாக கொசு உற்பத்தி இடங்களை கண்டறிந்து அவற்றை அழித்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு 40 DBC பணியாளர்கள் பொதுசுகாதாரத் துறையின் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். நகர்மன்ற தீர்மான எண்.181 நாள்.18.01.2018 ன்படி 01.01.2018 முதல் 31.03.2018 முடிய உள்ள மூன்று மாதங்களுக்கு மேற்கண்ட பணியாளர்களின் பணி நீட்டிக்கப்பட்டது. தற்போது டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளமையால் தொடர்ந்து மேலும் மூன்று மாதங்களுக்கு 01.04.2018 முதல் 30.06.2018 முடிய நீட்டிப்பு செய்துகொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.7.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 270 | **பொருள் எண்.7**<br><br>பொதுச்சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி 19.04.2018 முதல் 24.04.2018 வரை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நகரில் குப்பைகள் தேங்கி பொதுசுகாதாரப்பணி முற்றிலும் பாதிக்கப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அறிவுரையின்படி, குப்பைகள் தேங்கி தொற்றுநோய் பரவும் அபாயத்தை தவிர்க்கும் பொருட்டு, தற்காலிக துப்புரவு பணியாளர்களை வைத்து சுகாதார பணி மேற்கொள்வதற்கு, திரு.முத்துவேல் நகராட்சி ஒப்பந்ததாரர் தற்காலிக துப்புரவு பணியாளர்களை அனுப்புவதற்கு சம்மதித்தன்பேரில் கீழ்க்கண்டவாறு தற்காலிக துப்புரவு பணியாளர்களை வைத்து நகராட்சி வார்டு பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் தினக்கூலி ரூ.315 என்ற அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | நாள். | பணிபுரிந்த துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | 20.04.2018 | 32 x 315 | 10080 |

| | | | |
|---|---|---|---|
| 2. | 21.04.2018 | 32 x 315 | 10080 |
| 3. | 22.04.2018 | 34 x 315 | 10710 |
| 4. | 23.04..2018 | 32 x 315 | 10080 |
| 5. | 24.04.2018 | 33 x 315 | 10395 |
| | | மொத்தம் | 51345 |

அலுவலகக்குறிப்பு

பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் மேற்கண்டவாறு தற்காலிக பணியாளர்களை வைத்து பணிமேற்கொண்டதையும், அதற்கானசெலவினத் தொகை ரூ.51345/— வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1070/2018/எச்1